செ.வெ.எண்:947 நாள்:04.11.2008

செய்தி வெளியீடு – 4.11.2008

## மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு இரண்டு லட்ச ரூபாய் நிவாரண உதவி முதலமைச்சர் கலைஞர் ஆணை

மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் இ.கோட்டைப்பட்டியில் இன்று காலையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தின் போது கல்வீச்சில் ஈடுபட்டவர்கள் மீது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கருப்பையா என்பவரின் மகன் சுரேஷ் உயிரிழந்ததாக கிடைத்த செய்தியை அறிந்து மிகுந்த வேதனையடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்ச ரூபாய் நிவாரண உதவி வழங்கிட ஆணையிட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து வருவாய் கோட்டாட்சியர் / உட்கோட்ட நீதிபதி அளவில் நீதி விசாரணை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

* * *

வெளியீடு: இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9